**நாணயச் சபை**
**இலங்கை மத்திய வங்கி**

**2022 மாச்சு 18 நிதித்தொழில் சட்டப் பணிப்புரைகள் 2022இன் 02ஆம் இலக்கம்**

# செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல்-பண சேவைகள்

**1. சட்ட ஏற்பாடுகள்**

1.1. 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் 12ஆம் பிரிவினால் வழங்கப்பட்ட அதிகாரங்களின் நியதிகளில், இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையானது உரிமம்பெற்ற சேவை வழங்குநர்கள் மற்றும் அவர்களின் வணிகர்களினூடாக உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளினால் பெற்றுக்கொள்ளப்பட்ட செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல்-பண சேவைகள் தொடர்பில் இப்பணிப்புரைகளை விடுக்கிறது.

**2. பணிப்புரைகளின் குறிக்கோள்**

2.1. நாடெங்கிலுமுள்ள வங்கி மற்றும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் துறையின் தற்போதுள்ள நேரடியான கிளை வலையமைப்புக்கள் வாடிக்கையாளர்களுக்கு நிதியியல் பணிகளுக்கான மட்டுப்படுத்தப்பட்ட சேவைகளை மாத்திரம் வழங்குகின்றன. ஆகையால், வங்கிச் சேவையை வசதியான முறையில் இயலுமைப்படுத்தி, உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் தொழிற்பாடுகளின் வினைத்திறனை விருத்திசெய்வதன் மூலமாக நிதியை எளிதாக அணுகுவதற்கான தீர்வாக செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல்-பண சேவைகள் இருக்கக்கூடும்.

**3. ஏற்புடைத்தன்மை மற்றும் செயற்பரப்பு**

3.1. இப் பணிப்புரைகள், உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்காக உரிமம்பெற்ற சேவை வழங்குநர்கள் மற்றும் அவர்களின் வணிகர்களினால் வழங்கப்படும் பணிப்புரை 4.1 தரப்பட்டுள்ள செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல்-பண சேவைகளுக்கு ஏற்புடையதாதல் வேண்டும்.

3.2. இப்பணிப்புரைகள், பின்வரும் பணிப்புரைகளின் தேவைப்பாடுகளிலிருந்து விலக்களிக்கப்பட வேண்டும்.

(அ) நிதித்தொழில் சட்டத்தின் ‘2.1 அ’, ‘2.1 ஏ’, மற்றும் ‘2.1 ஓ’ ஆம் இலக்கப் பணிப்புரை (வியாபாரத் தொழிற்பாடுகளை வெளியாட்களிடம் ஒப்படைத்தல்) 2018ஆம் அண்டின் 07ஆம் இலக்கப் பணிப்புரை, மற்றும்

(ஆ) நிதித்தொழில் சட்டத்தின் 6.2ஆம் இலக்கப் பணிப்புரை (வியாபார விரிவாக்கம் மற்றும் தொழிற்பாடுகள்) 2020ஆம் ஆண்டின் 06ஆம் இலக்கப் பணிப்புரை.

**4. செல்லிடத் தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல்-பண முறைமையூடாக அனுமதிக்கப்பட்ட சேவைகள்**

4.1. உரிமம்பெற்ற நிதிக் கம்பனியானது உரிமம்பெற்ற சேவை வழங்குநர்கள் மற்றும் அவர்களின் வணிகர்களின் செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல்-பண முறைமைகளினூடாக பின்வருவனவற்றை மேற்கொள்ளலாம்.

அ) வைப்பினை ஏற்றல்

ஆ) வைப்பினை எடுப்பனவு செய்தல்

இ) கடன் பகிர்ந்தளிப்புக்கள்

ஈ) கடன் மீள்கொடுப்பனவை பெற்றுக்கொள்ளுதல்

உ) 4.1 அ) தொடக்கம் ஈ) வரையுள்ள பிரிவுகளுக்கான ஏற்புடைய கட்டணங்களும் அறவீடுகளும், மற்றும்

ஊ) பணிப்பாளரினால் அனுமதிக்கப்பட்டவாறான வேறு ஏதேனும் நடவடிக்கை.

**5. உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் பொறுப்பு**

5.1. பணிப்பாளர் சபை

(அ) வியாபார உத்திகளுக்கமைவாக உரிமம்பெற்ற சேவை வழங்குநர்கள் மற்றும் அவர்களின் வணிகர்களினால் வழங்கப்படும் செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல்-பண சேவைகள் தொடர்பான உத்தியை உருவாக்குவதற்கு பணிப்பாளர் சபை பொறுப்புடையதாதல் வேண்டும்.

(ஆ) பொருத்தமான சபை மேற்பார்வை, போதியளவு தொழில்நுட்ப வளங்கள் மற்றும் வணிகர்களை உள்ளடக்கிய சுயாதீனமான கணக்காய்வொன்று ஆகியவற்றுடன் சபை அனுமதித்தகொள்கைகள், ஆற்றல்வாய்ந்த மற்றும் வலுவான இடர்நேர்வு முகாமைத்துவ கட்டமைப்புக்களினால் செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல்-பண சேவைகள் மூலோபாயம் ஆதரவளிக்கப்பட வேண்டும்.

(இ) உரிமம்பெற்ற சேவை வழங்குநர்கள் மற்றும் அவர்களின் வணிகர்களின் செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல்-பண சேவைகளினால் ஏற்படக்கூடிய சாத்தியமான இடர்நேர்வுகளைத் தெளிவாக அறிந்து கொடுகடன் இடர்நேர்வு, திரவத்தன்மை இடர்நேர்வு, நன்மதிப்பு தொடர்பான இடர்நேர்வு, தொழில்நுட்ப

இடர்நேர்வு, சட்ட மற்றும் இணங்குவிப்பு இடர்நேர்வு போன்றன உள்ளடங்கலான அனைத்து தொடர்புடைய இடர்நேர்வுகளையும் முகாமை செய்தல். அத்தகைய இடர்நேர்வுகள் குறைந்தபட்சம் வருடாந்த அடிப்படையில் மீளாய்வு செய்யப்பட வேண்டும்.

5.2. தலைமை நிறைவேற்று அலுவலர்

(அ) உரிமம்பெற்ற சேவை வழங்குநர்கள் மற்றும் அவர்களின் வணிகர்கள் மூலமாகப் பெறப்பட்ட செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல் -பண சேவைகளை அவற்றின் நம்பகத்தன்மை, உரிமம்பெற்ற நிதிக் கம்பனிக்கு வெளிப்படும் இடர்நேர்வு ஆகியவற்றைக் கொண்டு தொடர்ச்சியாக மதிப்பீடு செய்வதுடன் தொடர்ச்சி பற்றிய தகவலறிந்த தீர்மானங்களை மேற்கொள்ளுதல்.

(ஆ) உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் இடர்நேர்வு தோற்றப்பாட்டுடன் இசைந்துசெல்லும் செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல்-பண சேவைகளுக்கான வரையறுக்கப்பட்ட கட்டமைப்புக்களின் (கொடுக்கல்வாங்கல் வரையறைகள், நாளுக்கான வரையறைகள், வாடிக்கையாளர் வரையறைகள், சேவை வழங்குநர் வரையறைகள், வணிக வரையறைகள்) உரிய மதிப்பீட்டை மேற்கொள்ளுதல்.

(இ) உள்ளக கணக்காய்வுகளையும் வெளியக கணக்காய்வுகளையும் நடாத்துவதன் மூலமாக கட்டுப்பாடுகளின் போதுமாந்தன்மையை மதிப்பீடு செய்தல்.

(ஈ) வாடிக்கையாளர்பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கான முறைமைகள் மற்றும் நடைமுறைகளை நடைமுறைப்படுத்துவதை உறுதிப்படுத்துதல்.

(உ) உரிமம்பெற்ற நிதிக் கம்பனிக்கும் உரிமம்பெற்ற சேவை வழங்குநருக்கும் இடையிலான இணங்குவிப்பில் உள்ள ஏற்பாடுகள் இப்பணிப்புரைகளின் ஏற்பாடுகளுடன் இணங்கிச்செல்வதை உறுதிசெய்தல்.

**6. பணிப்பாளருக்கான அறிவித்தல்கள் மற்றும் சமா்ப்பிப்புகள்**

6.1. உரிமம்பெற்ற சேவை வழங்குநா்கள் மற்றும் அவா்களின் வணிகா்களினால் வழங்கப்படும் செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல்-பண சேவைகளை ஆரம்பித்தல், இடைநிறுத்துதல் அல்லது ஏதேனும் திருத்தத்தை மேற்கொள்வதற்கு முன்னா் உரிமம்பெற்ற நிதிக் கம்பனியொன்று பணிப்பாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

6.2. உரிமம்பெற்ற சேவை வழங்குநா்கள் மற்றும் அவா்களின் வணிகா்களினால் வழங்கப்படும் செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல்-பண சேவைகளை ஆரம்பிப்பதற்கு முன்னா் உரிமம்பெற்ற நிதிக் கம்பனியொன்று பணிப்பாளருக்கு பின்வருவனவற்றை சமா்ப்பித்தல் வேண்டும்.

(அ) முன்மொழியப்பட்ட செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல்-பண சேவைகள் தொடா்பான உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் பணிப்பாளா் சபையின் அனுமதி.

(ஆ) அட்டவணை Iஇல் தரப்பட்டுள்ள முன்மொழியப்பட்ட செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல்-பண சேவைகளின் குறைந்தபட்ச தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுதல் தொடா்பான உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் பணிப்பாளா் சபையின் உறுதிப்படுத்தல்.

(இ) அட்டவணை IIஇல் தரப்பட்டுள்ள முன்மொழியப்பட்ட செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல்-பண சேவைகளின் குறைந்தபட்ச தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுதல் தொடா்பான உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் தலைமை நிறைவேற்று அலுவலரின் உறுதிப்படுத்தல்.

(ஈ) அட்டவணை III இல் தரப்பட்டுள்ளவாறான முன்மொழியப்பட்ட செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல்-பண சேவைகளில் ஈடுபட்டுள்ள வணிகர்களின் விபரங்கள்.

(உ) அட்டவணை IV இல் தரப்பட்டுள்ளவாறான முக்கிய இடர்நேர்வு வகைகளையும் தணிக்கைகளையும் உள்ளடக்கிய முன்மொழியப்பட்ட செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல்-பண சேவை மற்றும் அதன் வியாபார தாக்கத்தின் மதிப்பீடு தொடர்பான சுருக்கமான அறிக்கை.

(ஊ) பணிப்பாளரினால் வேண்டப்படும் முன்மொழியப்பட்ட செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல்-பண சேவையுடன் தொடர்புடைய வேறு ஏதேனும் தகவல்.

**7. வாடிக்கையாளர் பாதுகாப்பு**

7.1 2018ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதித்தொழில் சட்டப் பணிப்புரையின் ஏற்பாடுகள் (நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு கட்டமைப்பு) உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்காக உரிமம்பெற்ற சேவை வழங்குநர்கள் மற்றும் அவர்களின் வணிகர்களினால் வழங்கப்படும் செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல்-பண சேவைகளுடன் இணங்கிச்செல்வதை உரிமம்பெற்ற நிதிக் கம்பனி உறுதிப்படுத்தல் வேண்டும்.

**8. மத்திய வங்கி மேற்பார்வை**

8.1 இப்பணிப்புரைகளுடன் உரிமம்பெற்ற நிதிக் கம்பனியொன்றினால் மேற்கொள்ளப்படும் இணங்குவிப்பை பணிப்பாளர் கண்காணிப்பார் மற்றும்:

அ) உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்காக உரிமம்பெற்ற சேவை வழங்குநர்கள் மற்றும் அவர்களின் வணிகர்களினால் வழங்கப்படும் செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல்-பண சேவைகள் தொடர்பான எந்த தகவல்களும் எந்த நேரத்திலும் அவசியமாகக் கருதப்படுமிடத்து கோரிக்கை விடுக்கலாம்.

ஆ) தேவை ஏற்படின், செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல்-பண சேவைகளில் ஈடுபட்டுள்ள உரிமம்பெற்ற சேவை வழங்குநர்கள் மற்றும் அவர்களின் வணிகர்களின் புத்தகங்களையும் வளாகங்களையும் ஆய்வு செய்யலாம்.

இ) அவசியமானது எனக் கருதப்படுமாயின், உரிமம்பெற்ற சேவை வழங்குநர்கள் மற்றும் அவர்களின் வணிகர்களுடனான செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல்-பண சேவை ஏற்பாட்டை நிறுத்துவதற்கும் இடைநிறுத்துவதற்கும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனியை பணிக்கலாம்.

ஈ) பொருத்தமானவாறு உரிமம்பெற்ற சேவை வழங்குநர்கள் மற்றும் அவர்களின் வணிகர்களுக்கு எதிராக ஏதேனும் நடவடிக்கை அல்லது வழிமுறையை எடுப்பதற்கு உரிமம்பெற்ற நிதிக் கம்பனியை பணிக்கலாம்.

உ) செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல்-பண சேவைகள் தொடர்பான உரிமம்பெற்ற சேவை வழங்குநர்கள் மற்றும் அவர்களின் வணிகர்களின் நடத்தையிலிருந்து தோன்றுகின்ற ஏதேனும் நிவாரண நடவடிக்கையை எடுப்பதற்கு உரிமம்பெற்ற நிதிக் கம்பனியை பணிக்கலாம்.

ஊ) உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் பணிப்பாளர் சபையானது இணங்காமையின் திருத்தத்தை உறுதிப்படுத்துகின்ற வரை, உரிமம்பெற்ற சேவை வழங்குநர்கள் மற்றும் அவர்களின் வணிகர்களினால் வழங்கப்படும் செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல்-பண சேவையை இடைநிறுத்துவதற்கு உரிமம்பெற்ற நிதிக் கம்பனியை பணிக்கலாம்.

**9. ஏனைய நிபந்தனைகள்**

9.1. உரிமம்பெற்ற சேவை வழங்குநர்கள் மற்றும் அவர்களின் வணிகர்களினால் வழங்கப்படும் செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல்-பண சேவைகளை நடாத்தும்பொருட்டு உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் குறைந்தபட்ச மூலதனப் போதுமை விகிதங்கள், குறைந்தபட்ச மைய மூலதனம் மற்றும் திரவச் சொத்துக்கள் என்பன மீதான பணிப்புரைகள் உட்பட, ஆனால் அவற்றுக்கு மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டிராத விதத்தில், முன்மதியுடைய தேவைப்பாடுகளுக்கும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் இணங்கியொழுகுவதாக இருத்தல் வேண்டும்.

9.2. உரிமம்பெற்ற சேவை வழங்குநர்கள் மற்றும் அவர்களின் வணிகர்களினால் வழங்கப்படும் செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல்-பண சேவைகள் தொடர்பாக அறவிடப்பட்ட அதிகபட்ச கொடுக்கல்வாங்கல் வரையறைகள் மற்றும்

கட்டணங்கள் இலங்கை மத்திய வங்கியின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு திணைக்களத்தினால் அல்லது பணிப்பாளரினால் விதிக்கப்படும் கொடுக்கல்வாங்கல் வரையறைகளையும் கட்டணங்களையும் விஞ்சலாகாது.

9.3. இப்பணிப்புரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட உரிமம்பெற்ற சேவை வழங்குநர்கள் மற்றும் அவர்களின் வணிகர்களினால் வழங்கப்படும் செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல்-பண சேவைகள் இப் பணிப்புரைகளிலிருந்து 6 மாதத்திற்குள் இப்பணிப்புரைகளின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுதல் வேண்டும் அத்துடன் இணங்குவிப்பு தொடர்பாக பணிப்பாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

**10. நடைமுறைக்கு வரும் திகதி**

10.1. இப்பணிப்புரைகள் இப்பணிப்புரையின் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**11. வரைவிலக்கணங்கள்**

11.1 ‘பணிப்பாளர்’ என்பது இலங்கை மத்திய வங்கியின் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளர் எனப் பொருள்படும்.

11.2 ‘இலத்திரனியல்-பணம்’ என்பது நிதியங்களின் கிடைப்பனவு மீது வழங்கப்படும் அத்துடன் கொடுப்பனவாக பயன்படுத்துகின்ற நோக்கத்திற்காகவும் நிதியியல் கடப்பாடுகளை தீர்ப்பனவு செய்வதற்கும் இலத்திரனியல் ரீதியாக சேமிக்கப்படும் நாணயப் பெறுமதி எனப் பொருள்படும்.

11.3. ‘வணிகர்’ என்பது செல்லிடக் கொடுப்பனவு பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு உரிமம்பெற்ற சேவை வழங்குநர்களினால் நியமிக்கப்படும் நிறுவனங்கள்/ஆட்கள் எனப் பொருள்படும்.

11.4. ‘உரிமம்பெற்ற சேவை வழங்குநர்’ என்பது 2013ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க அல்லது திருத்தப்பட்டவாறான கொடுப்பனவு அட்டைகள் மற்றும் செல்லிடக் கொடுப்பனவு முறைமைகள் ஒழுங்குவிதிகளுக்கமைவாக சேவை வழங்குநர் எனப் பொருள்படும்.

**நிவார்ட் அஜித் லெஸ்லி கப்ரால்**
நாணயச் சபையின் தலைவரும்
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்

அட்டவணை I

## பணிப்பாளர் சபையின் உறுதிப்படுத்தல்

உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் பணிப்பாளர் சபையின் உறுதிப்படுத்தலானது உரிமம்பெற்ற சேவை வழங்குநர்கள் மற்றும் அவர்களின் வணிகர்களினால் வழங்கப்படும் முன்மொழியப்பட்ட செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல்-பண சேவைகளுடன் தொடர்புடைய பின்வரும் தேவைப்பாடுகளை குறைந்தபட்சம் உள்ளடக்குதல் வேண்டும்.

அ) செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல்-பண சேவைகள் தொடர்பான இப் பணிப்புரைகளுக்கான இணங்குவிப்பும் பின்பற்றுதலும்.

ஆ) சபைக்கான இணங்குவிப்பும் பின்பற்றுதலும்,

i. உரிமம்பெற்ற சேவை வழங்குநர் மற்றும் அவர்களின் வணிகரின் தேர்வு கொள்கை.
ii. இடர்நேர்வு முகாமைத்துவ கட்டமைப்பு
iii. வாடிக்கையாளர் பாதுகாப்பு பொறிமுறை
iv. செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல்-பண சேவை முகாமைத்துவம், கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்பு பொறிமுறை; மற்றும்
v. தொழிற்பாட்டு நடைமுறைகள் மற்றும் கையேடுகள்

போன்றனவற்றுக்கு அங்கீகரிக்கப்பட்டது.

இ) உரிமம்பெற்ற நிதிக் கம்பனி மற்றும் உரிமம்பெற்ற சேவை வழங்குநர்கள் மற்றும் அவர்களின் வணிகர்களுடன் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையில் தேவையான ஏற்பாடுகளின் கிடைப்பனவு மற்றும் இப் பணிப்புரைகளுடன் அத்தகைய ஏற்பாடுகள் இணங்குகின்றன.

ஈ) 2013ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க அல்லது திருத்தப்பட்டவாறான கொடுப்பனவு அட்டைகள் மற்றும் செல்லிடக் கொடுப்பனவு முறைகள் ஒழுங்குவிதிகளுடனும் அல்லது இலங்கை மத்திய வங்கியினால் விடுக்கப்படும் ஏதேனும் ஒழுங்குவிதிகளுடனும் உரிமம்பெற்ற சேவை வழங்குநர்கள் மற்றும் அவர்களின் வணிகர்கள் இணங்கிச்செல்வதை உறுதிப்படுத்தல்.

உ) செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல்-பண சேவைகளை செயற்படுத்துவதற்கு போதுமான வளங்கள் மற்றும் நிபுணத்துவம் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளிடம் கிடைக்கப்பெறுகின்றன.

ஊ) உரிமம்பெற்ற சேவை வழங்குநர்கள் மற்றும் அவர்களின் வணிகர்களினால் வழங்கப்படும் செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல்-பண சேவைகளுடன் தொடர்புடைய அனைத்து இடர்நேர்வுகளும் இனங்காணப்பட்டு, ஆவணப்படுத்தப்பட்டு மற்றும் தணிப்பதற்கும் மாற்றல் செய்வதற்குமான பொருத்தமான நடவடிக்கைகள் நிறுவப்பட்டுள்ளன.

எ) உரிமம்பெற்ற சேவை வழங்குநர்கள் மற்றும் அவர்களின் வணிகர்களினால் வழங்கப்படும் செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல்-பண சேவைகளின் பயன்பாட்டுடன் முறைப்பாட்டு வழிமுறைகள் மற்றும் நிவாரணப் பொறிமுறையுடன் தொடர்புடைய வாடிக்கையாளர் பாதுகாப்பிற்கான முறைமைகளும் நடைமுறைகளும் நிறுவப்பட்டுள்ளன.

ஏ) உரிமம்பெற்ற சேவை வழங்குநர்கள் மற்றும் அவர்களின் வணிகர்களினால் வழங்கப்படும் செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல்-பண சேவைகளை தொடர்ந்துசெல்லும் அடிப்படையில் கண்காணிப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் போதுமான உள்ளக கட்டுப்பாடுகள், முறைமைகள் மற்றும் ஆளணியினர் அத்துடன் குறித்துரைக்கப்பட்ட கடப்பாடுகளுடன் உரிமம்பெற்ற சேவை வழங்குநர்கள் மற்றும் அவர்களின் வணிகர்களினால் மேற்கொள்ளப்பட்ட இணங்காத சந்தர்ப்பங்கள் அல்லது தவறுகளை நிவர்த்திசெய்வதற்கு போதியளவான மேற்பார்வை.

ஐ) பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் நடவடிக்கைகளை ஒழிக்கும் பொருட்டு விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் அதனுடன் விடுக்கப்பட்ட வழிகாட்டல்களில் குறிப்பிடப்படுள்ளதற்கமைவாக 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டம் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளின் ஏற்பாடுகளுக்கான பின்பற்றுதல்.

ஒ) உரிமம்பெற்ற நிதிக் கம்பனி வாடிக்கையாளர்களின் தகவலின் இரகசியத்தன்மையையும் பாதுகாப்பையும் பேணுவதை உறுதிப்படுத்துவதற்கான முறைமைகள் மற்றும் நடைமுறைகளை நிறுவுதல்.

ஓ) உரிமம்பெற்ற சேவை வழங்குநர்கள் மற்றும் அவர்களின் வணிகர்களினால் வழங்கப்படும் தங்குதடையற்ற செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல்-பண சேவைகளை உறுதிப்படுத்துவதற்கான வியாபாரத்தை தொடர்வதற்கான திட்டத்தின் கிடைப்புத்தன்மை.

ஔ) பின்வரும் குறைந்தபட்ச பிரமாணம் தொடர்பில் செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல்-பண சேவையை ஆரம்பிப்பதற்கு முன்னர் உரிமம்பெற்ற சேவை வழங்குநர்கள் மற்றும் அவர்களின் வணிகர்களின் பொருத்தப்பாட்டினை மதிப்பீடு செய்தல்.

i. அதன் வியாபார நடத்தையில் நேர்மையையும் தொழில்சார் நியமங்களையும் எடுத்துரைத்தல்.

ii. பணம் தூயதாக்கலுக்கெதிராக மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் வழிமுறைகள், பதிவைப் பேணுதல், உள்ளக கட்டுப்பாடுகள் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு நடவடிக்கைகளை திறம்பட நடைமுறைப்படுத்துவதற்கு ஆதரவளிப்பதற்கு போதுமான வளங்களை கொண்டிருத்தல்.

iii. ஏதேனும் சட்டவிரோத/ ஒழுக்கவிழுமியங்களற்ற நடவடிக்கைகளில் ஈடுபடாதிருத்தல்.

iv. உயர் தரத்திலான செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல்-பண சேவைகளை வழங்குவதற்கான அறிவையும் தேர்ச்சியையும் கொண்டிருத்தல்.

v. செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல்-பண கொடுக்கல்வாங்கல்களுடன் தொடர்புடைய அனைத்து இடர்நேர்வுகளையும் கட்டுப்படுத்துவதற்கான ஆற்றலை வெளிப்படுத்தல்.

**அட்டவணை II**

**தலைமை நிறைவேற்று அலுவலரின் உறுதிப்படுத்தல்**

தலைமை நிறைவேற்று அலுவலரின் உறுதிப்படுத்தலானது உரிமம்பெற்ற சேவை வழங்குநர்கள் மற்றும் அவர்களின் வணிகர்களினால் வழங்கப்படும் முன்மொழியப்பட்ட செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல்-பண சேவைகளுடன் தொடர்புடைய பின்வரும் தேவைப்பாடுகளை குறைந்தபட்சம் உள்ளடக்குதல் வேண்டும்.

அ) உரிமம்பெற்ற சேவை வழங்குநர்கள் மற்றும் அவர்களின் வணிகர்களினால் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் முன்மொழியப்பட்ட செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல்-பண சேவைகளின் பயன்பாடு தொடர்பில் விழிப்புணர்வு பிரச்சாரங்களின் மூலமாக தெளிவான, அறிந்த மற்றும் ஆவணப்படுத்தப்பட்ட தீர்மானமொன்றை மேற்கொள்ளுதல்.

ஆ) நன்மைபெறும் நிதிக் கம்பனி கணக்கு உடமையாளருக்கு செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல்-பண கொடுக்கல்வாங்கல் குறித்து அதேநேர அடிப்படையில் நிதிக் கம்பனியொன்றினால் அனுப்பப்படும் குறுஞ்செய்தி மற்றும்/அல்லது மின்னஞ்சல் மூலமாக அறிவிக்கப்பட வேண்டும்.

இ) உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் தொழிற்பாட்டு கைநூல்களில் பிரதிபலிக்கப்பட்டவாறு உரிமம்பெற்ற சேவை வழங்குநர்கள் மற்றும் அவர்களின் வணிகர்களினால் வழங்கப்படும் செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல்-பண சேவைகளின் செயன்முறைகளின் கிடைப்பனவு.

ஈ) உரிமம்பெற்ற சேவை வழங்குநர்கள் மற்றும் அவர்களின் வணிகர்களினால் வழங்கப்படும் செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல்-பண சேவைகள், உரிமம்பெற்ற சேவை வழங்குநர், உரிமம்பெற்ற நிதிக் கம்பனி மற்றும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் வாடிக்கையாளர் கணக்கு ஆகியவற்றுக்கிடையில் இணங்கிசெல்வதை உறுதிப்படுத்துவதற்கான முறைமைகளினதும் நடைமுறைகளினதும் கிடைப்பனவு.

உ) செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல்-பண சேவையில் ஈடுபட்டுள்ள உரிமம்பெற்ற சேவை வழங்குநர் மற்றும் அவர்களின் வணிகர்களின் தொலைபேசி இலக்கம் மற்றும் நேரடி அமைவிடம்/முகவரி ஆகியவற்றை உள்ளடக்கிய இற்றைப்படுத்தப்பட்ட பட்டியலொன்றை/தரவுத்தளமொன்றை பேணுதல்.

ஊ) உரிமம்பெற்ற சேவை வழங்குநர் மற்றும் அவர்களின் வணிகர்கள் உள்ளக மற்றும் வெளியக இரண்டிலுமுள்ள அச்சுறுத்தல்களிலிருந்து தகவல்களை பாதுகாப்பதற்கான பொருத்தமான பாதுகாப்பு கட்டுப்பாடுகளை கொண்டுள்ளனர் என்பதை உறுதிப்படுத்தல்.

எ) உரிமம்பெற்ற சேவை வழங்குநர் மற்றும் அவர்களினால் வழங்கப்படும் முன்மொழியப்பட்ட செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல்-பண சேவைகளுடன் தொடர்புடைய முறைப்பாடுகள் அல்லது குறைகளை தெரிவிப்பதற்கு வாடிக்கையாளருக்காக பிரத்தியேக துரித இலக்கமொன்றின் கிடைப்பனவு.

**அட்டவணை III**

உரிமம்பெற்ற சேவை வழங்குநரின் வாடிக்கையாளர்களின் விபரங்கள் (ஆனால் கீழே குறிப்பிடப்பட்டவற்றுக்கு மட்டுப்படுத்தப்பட்டவை அல்ல).

அ) வணிகரின் பெயர்

ஆ) வியாபார பதிவு இலக்கம்

இ) பதிவுசெய்யப்பட்ட முகவரி மற்றும் தொடர்பு விபரங்கள் (பதிவுசெய்யப்பட்ட முகவரியிலிருந்து வேறுபடுமாயின், அஞ்சல் முகவரியை உள்ளடக்கவும்)

ஈ) முக்கிய வியாபார நடவடிக்கைகள்

உ) நிதியியல் ஆற்றல்வாய்ந்த தன்மை

**அட்டவணை IV**

உரிமம்பெற்ற சேவை வழங்குநர் மற்றும் அவர்களின் வணிகர்களினால் வழங்கப்படும் முன்மொழியப்பட்ட செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இலத்திரனியல்-பண சேவைகள் தொடர்பில் சுருக்கமான வாய்ப்புவள அறிக்கையொன்று.

அ) வியாபார முன்மொழிவின் நோக்கெல்லை

ஆ) ஈடுபட்ட தரப்பினர்கள்

இ) செலவு/நன்மை தொடர்பான பகுப்பாய்வு

ஈ) வாடிக்கையாளர்களுக்கான அறவீடுகள்/கட்டணங்கள்